வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்: 4379 /ஆ4/ 2025, நாள்.18.02.2026

– – –

பொருள் : தேர்வுகள் –வேலூர் மாவட்டம் –மேல்நிலை பொதுத் தேர்வுகள் மார்ச்–2026 –சார்பாக துறை அலுவலர்கள் ,வழித்தட அலுவலர்கள் ,பறக்கும் படை உறுப்பினர்கள் –முதுகலை ஆசிரியர்கள்– முதன்மைக் கல்வி அலுவலர் தலைமையிலான தேர்வுகள் சார்ந்த கூட்டம் நடத்துதல் பணியில் சார்ந்த ஆசிரியர்களை விடுவித்து அனுப்புதல் மற்றும் தேர்வு மையங்களாக செயல்படும் பள்ளியின் தலைமையாசிரியர்கள் வருகை புரிய தெரிவித்தல்–தொடர்பாக

=========

மேற்காணும் பொருள் சார்ந்து வேலூர் மாவட்டத்தில் மார்ச் –2026 மேல்நிலை பொதுத்தேர்வுகள் தொடர்பான துறை அலுவலர்கள் ,வழித்தட அலுவலர்கள் ,பறக்கும் படை உறுப்பினர்கள் ஆயத்தக் கூட்டம் கீழ்க்காணும் அட்டவணையின் படி நடைபெறவுள்ளது .

எனவே அனைத்து அரசு /நிதியுதவி /நகரவை /ஆதிதிராவிட நல / மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள இணைப்பில் காணும் பாட முதுகலை ஆசிரியர்களுக்கான பொதுத்தேர்வு தொடர்பான முன் ஆயத்தக்கூட்டம் வேலூர்,சத்துவாச்சாரி, ஹோலி கிராஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி கூட்ட அரங்கில் 20.02.2026 (வெள்ளிக்கிழமை ) முற்பகல் 9.00 மணிக்கு நடைபெறவுள்ளதால் இணைப்பில் காணும் முதுகலை ஆசிரியர்களை கலந்து கொள்ள ஏதுவாக பணியிலிருந்து விடுவித்து அனுப்புமாறு சார்ந்த மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மார்ச் –2026 மேல்நிலை முதலாமாண்டு (Arrear) மற்றும் இரண்டாமாண்டு பொதுத்தேர்விற்கு அறைக் கண்காணிப்பாளர் தேர்வு குலுக்கல் முறையில் (lot system) தேர்வு செய்யப்பட உள்ளதால் தேர்வு மைய பள்ளித் தலைமையாசிரியர்கள் (இணைப்பு பள்ளி தலைமையாசிரியர்கள் தவிர்த்து) வருகை புரிந்து தங்கள் தேர்வு மையங்களுக்கு தேவையான அறை கண்காணிப்பாளர்களை தேர்ந்தெடுக்க இணைப்பில் காணும் அட்டவணைப்படி தேர்வு மைய தலைமையாசிரியர் வருகை புரிய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

//ஓம்.//
முதன்மைக் கல்வி அலுவலர் ,
வேலூர் .

பெறுநர்
அரசு /நிதியுதவி /நகரவை /ஆதிதிராவிட நல / மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்
வேலூர் மாவட்டம்.
நகல்

- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை /தனியார் /தொடக்கக்கல்வி ) அவர்களுக்கு தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.
- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி ) அவர்களுக்கு தகவலின் பொருட்டு அனுப்பப்படுகிறது.

| பிப்ரவரி –2026<br>சார்ந்த மேல்நிலைப்பள்ளி முதுகலை ஆசிரியர்கள்ஆயத்தக் கூட்டம்<br>நாள்.20.02.2026 | | | |
|---|---|---|---|
| வ. எண் | சார்ந்த மேல்நிலைப்பள்ளி முதுகலை ஆசிரியர்கள் | நாள் மற்றும் நேரம் | இடம் |
| 1. | சார்ந்த அரசு /நிதியுதவி /நகரவை /ஆதிதிராவிட நல / மேல்நிலைப்பள்ளி முதுகலை ஆசிரியர்கள் மற்றும் தொழிற்கல்வி பயிற்றுநர்கள் /உடற்கல்வி இயக்குநர் நிலை –1 | **20.02.2026** முற்பகல் 9.00 மணி முதல் 11.00 வரை | ஹோலி கிராஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி. சத்துவாச்சாரி,வேலூர். |

## தேர்வு மைய பள்ளித் தலைமையாசிரியர்கள் கூட்டம்

| வ. எண் | தேர்வு மைய பள்ளித் தலைமையாசிரியர்கள் | நாள் மற்றும் நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1. | தேர்வு மைய மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் | **20.02.2026** பிற்பகல் 2.00 மணி முதல் 5.00 வரை | ஹோலி கிராஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி. சத்துவாச்சாரி,வேலூர். |

**//ஓம்.//**
முதன்மைக் கல்வி அலுவலர் ,
வேலூர் .